செய்தி வெளியீடு எண்: 111 நாள்: 14.02.2018

**சாலைப்பாதுகாப்பு ஆணையர் அலுவலகம்,**
**தமிழ்நாடு அரசு, சேப்பாக்கம், சென்னை–5.**

**போக்குவரத்து துறை**

**பத்திரிக்கைச் செய்தி**

போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் 6வது மாநில சாலைப் பாதுகாப்புக் குழுக் கூட்டம் 13.02.2018ம் நாளன்று தமிழகத்தில் நடைபெறும் சாலை விபத்துக்கள் மற்றும் அதனால் ஏற்படும் உயிரிழப்புக்களை குறைக்க எடுக்கப்படவுள்ள வழிமுறைகள் குறித்து விவாதித்தது. இதில் தலைமைச் செயலர், காவல் துறை தலைமை இயக்குநர் மற்றும் இதர உயர் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர். 2016ம் ஆண்டில் நடைபெற்ற சாலை விபத்துக்கள் மற்றும் உயிரிழப்புக்களை ஒப்பிடும் பொழுது 2017ம் ஆண்டில் 5869 சாலை விபத்துக்களும் 1061 உயிரிழப்புகளும் குறைந்துள்ளது குறித்து மாநில சாலைப் பாதுகாப்புக்குழு வெகுவாகப் பாராட்டியது. 2017ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைபெற்ற உயிரிழப்புக்களுடன் ஒப்பிடும்பொழுது 2018ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 244 உயிரிழப்புக்கள் குறைந்துள்ளது குறித்து மாநில சாலைப் பாதுகாப்புக்குழு கருத்தில் கொண்டது. 2018ம் ஆண்டில் மாநிலத்தில் 4995 உயிரிழப்புக்களை குறைக்க இலக்கீடு நிர்ணயம் செய்ததை குழு ஏற்றுக் கொண்டது. தேசிய நெடுஞ்சாலை/மாநில நெடுஞ்சாலை மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையக சாலைகளில் அடிக்கடி விபத்து ஏற்படும் பகுதிகளைக் கண்டறிந்து அவைகளுக்கு தீர்வு நடவடிக்கை எடுக்க குழு அறிவுறுத்தியுள்ளது. மாநிலத்தில் பக்கவாட்டுச் சாலையிலிருந்து தேசிய நெடுஞ்சாலை/மாநில நெடுஞ்சாலை/இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையக சாலைகளில் ஏற்படும் சந்திப்புகளில் வேக தடுப்பான்கள் மற்றும் எச்சரிக்கைப் பலகைகள் அமைக்க குழு தகுந்த அறிவுரைகள் வழங்கியது. இது போன்று முக்கிய சாலை சந்திப்புகளில் சாலைக் குறியீடுகள், எச்சரிக்கைப் பலகைகள் மற்றும் போதிய மின் விளக்குகள் ஆகியவைகளை நிறுவுவதால் சாலை சந்திப்புக்களில் ஏற்படும் விபத்துக்களைத் தடுப்பதற்காக மாநில நெடுஞ்சாலை மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையகத்திற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையக சாலைகளில் உள்ள 133 அங்கீகரிக்கப்படாத குறுக்கு வழிகளை மூடிவிடுமாறு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையகத்திற்கு தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. குறுகிய பாலங்கள் / மதகுகள் உள்ள இடங்களில் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கும்பொருட்டு குறுகிய பாலங்கள் தெளிவாகத் தெரியும் பொருட்டு தகுந்த எச்சரிக்கைப் பலகைகள் மற்றும் போதிய மின் விளக்கு வசதிகள் ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் செய்து முடிக்குமாறு நெடுஞ்சாலைத் துறை கோரப்பட்டுள்ளது.

ஜனவரி 2018 முடிய அதிவேகம், அதிக பாரம், சரக்கு வாகனங்களில் ஆட்களை ஏற்றிச் செல்லுதல், சிவப்பு விளக்கை தாண்டுதல், குடிபோதையில் வாகனத்தை இயக்குதல் மற்றும் வாகனத்தை இயக்கும்போது செல் போன் உபயோகித்தல் போன்ற போக்குவரத்து விதிமீறல்களுக்காக 187213 ஓட்டுநர் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதை மாநில சாலை பாதுகாப்புக்குழு வெகுவாகப் பாராட்டியது. மாநில நெடுஞ்சாலை/தேசிய நெடுஞ்சாலை/இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையரக சாலைகளில் நிறுத்தப்பட்டுள்ள காவல் துறையைச் சார்ந்த நெடுஞ்சாலை ரோந்து வாகனங்களின் செயல்பாடுகளை உன்னிப்பாக கவனிக்கும்பொருட்டு காவல் துறை கோரப்பட்டுள்ளது. இருசக்கர வாகன ஓட்டிகளால் ஏற்படும் உயிரிழப்புக்கள் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு இரு சக்கர வாகன ஓட்டி மற்றும் பின்னால் அமர்ந்து செல்பவர் ஆகியோரும் அவர்களுடைய உயிரைக் காப்பாற்றும் பொருட்டு கட்டாயமாக தலைக்கவசம் அணிய வேண்டும் என வற்புறுத்தப்பட்டது. சுற்றலா சீருந்து ஒட்டுநர்கள் மற்றும் மேக்சிகேப் ஓட்டுநர்களின் பணி நேரத்தை முறைப்படுத்தும் பொருட்டு பணி நேரத்தை முறையாகப் பின்பற்றப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. தவறும்பட்சத்தில் அனுமதிச்சீட்டு/தகுதிச் சான்று ஆகியவை புதுப்பிக்கப்படமாட்டாது அல்லாமல் அவர்களுடைய ஓட்டுநர் உரிமமும் ரத்து செய்யப்படும். சாலைப் பாதுகாப்பு குறித்த பல்வேறு தலைப்புகளில் சாலை பாதுகாப்பு ஈர்ப்பு இசை அகில இந்திய வானொலி மூலம் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு ஒலிபரப்பப்பட்டு வருகிறது. மோட்டார் வாகன தயாரிப்பாளர்கள் மற்றும் மோட்டார் வாகன விற்பனையாளர்களும் இந்த சாலைப் பாதுகாப்பு ஈர்ப்பு இசையினை அகில இந்திய வானொலியின் ஒலிபரப்பு சென்றடையாத இடங்களில் தனியார் FM சேனல்கள் மூலமாக பெருநகரங்கள் மற்றும் நகரங்களுக்கு சென்றடையும் பொருட்டு ஒலிபரப்பப்பட்டு வருகிறது. மாநிலக் கல்வி வாாரிய வகுப்பு 1 முதல் 12 வரை உள்ள பாடப்புத்தகங்களில் சாலைப் பாதுகாப்பு இடம் பெற்றிருப்பது குறித்து மாநில சாலைப் பாதுகாப்புக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. சாலை உபயோகிப்போர்கள் சாலை விதிகளை அனுசரித்து விலைமதிப்பில்லாத மனித உயிர்கள் சாலை விபத்துக்களில் பலியாவதை தடுக்கும் பொருட்டு அரசின் கரத்தை வலுசேர்க்க உதவிடுமாறு மாநில சாலைப் பாதுகாப்புக்குழு அனைவரையும் கேட்டுக் கொண்டது.

சாலைப்பாதுகாப்பு ஆணையர்/
போக்குவரத்து ஆணையர்,
தமிழ்நாடு அரசு, சென்னை 5.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**